*6*

## *திறவுகோல் வசனம்: மத்தேயு 26:17-30*

# கர்த்தருடைய இராப்போஜனத்தின் பகுதிப்பொருள்கள்

*கர்த்தருடைய இராப்போஜனத்தில் பயன்படுத்தப்படும் அப்பம் மற்றும் திராட்ச ரசம் ஆகியவற்றின் இயல்பைப் பற்றிய கேள்விகள் சில வேளைகளில் எழுகின்றன. கர்த்தருடைய பந்தி மேஜையில் இருக்க வேண்டியவை எவை?*

## அப்பம்

இயேசு கர்த்தருடைய இராப்போஜனத்தை ஏற்படுத்தியபோது, அவர் பஸ்கா அப்பத்தைப் பயன்படுத்தினார். பஸ்காவின் போதும் மற்ற வேளைகளிலும் புளிப்பில்லாத அப்பம் பயன்படுத்தப்பட வேண்டும் என்று நியாயப்பிரமாணம் மிகவும் குறிப்பாக அறிவுறுத்தியது. அப்பத்தைப் பற்றி நாம், வேதாகமரீதியான மற்றும் வேதாகமத்திற்கு அப்பாற்பட்ட ஆதாரமூலங்களில் இருந்து அறிந்து கொள்ள முடியும்.

பலஸ்தீனத்தில் அப்பம் என்பது பெரும்பாலும் கோதுமையினால் செய்யப்பட்டது. அது, ஆசாரியர்களைப் பரிசுத்தப்படுத்தும் நிகழ்வில் புளிப்பில்லாததாகப் பயன்படுத்தப்பட வேண்டியதாக இருந்தது (யாத்திராகமம் 29:1, 2). வாற்கோதுமை (எண்ணாகமம் 5:15) மற்றும் கம்பு (எசேக்கியேல் 4:9) ஆகியவை, மற்ற நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட தானியங்களாக இருந்தன. இரு கற்களுக்கு இடையில் தானியத்தைப் போட்டு அழுத்தித் தேய்ப்பதன் மூலம் அல்லது ஒரு மிருகத்தினால் சுற்றப்படும் அரவை எந்திரம் வழக்கமாகப் பயன்படுத்தப்படும் ஆலையில் தானியத்தை ஒரு அரவை எந்திரத்தில் அரைப்பதன் மூலம் தயாரிக்கப்பட்டது.

மாவைப் பிசையும் பாத்திரங்கள் (தொட்டிகள்) எகிப்தியர்களாலும் (யாத்திராகமம் 8:3) எகிப்தை விட்டுப் புறப்படும்போது இஸ்ரவேல் மக்களாலும் (யாத்திராகமம் 12:34) பயன்படுத்தப்பட்டன. அன்றாடப் பயன்பாட்டிற்கென்று சாதாரண அப்பம் சுடப்படுவதற்கு முந்திய நாளில், மாவு, தண்ணீர் மற்றும் புளிப்பான் ஆகிய பகுதிப்பொருள்கள் பாத்திரங்களில் போடப்பட்டு கையால் பிசைந்து வைக்கப் பட்டன. மாவு வழக்கமாக மென்மையான வட்டவடிவ முழு அப்பங்களாக வடிவாக்கப்பட்டது. புளிப்பானின் செயல்விளைவினால் அப்பம் பொங்கி எழுந்தபின்பு, அது சுடப்பட்டது. பஸ்கா அப்பத்தைப் பொறுத்தமட்டில் இவ்வாறு செய்யப்படவில்லை. இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் இருந்து அவசரமாகப் புறப்பட்டதால், அப்பம்(மாவு) பொங்கி எழுவதற்கு அவர்கள் நேரம் கொண்டிருக்கவில்லை. இந்தக் காரணத்தினால், பஸ்கா அப்பம் புளிப்பில்லாத வகையில் சுடப்பட்டது.

பழைய ஏற்பாட்டுக் காலங்களில் அப்பம் சுடுவதில் மூன்று முறைமைகள்

பயன்படுத்தப்பட்டன:

- கற்களைச் சூடாக்குவதற்காக அவற்றைச் சுற்றி அடுப்பு கட்டப்பட்டது. கற்கள் சூடானபோது, தழல் பாத்திரங்கள் கற்களின் மீது வரிசையாக வைக்கப்பட்டு அவற்றின் மீது மாவு இடப்பட்டது.
- உலோகம் அல்லது மண்ணினால் ஆன சமைக்கும் பாத்திரத்தில் மாவு இடப்பட்டது. இவை அப்பமாகச் சமைக்கப்படும்படி நெருப்பிற்கு மேலாக வைக்கப்பட்டன.
- மூடப்பட்ட பாத்திரங்கள், தரையைப் பறித்து அதற்குள்ளாகவோ அல்லது தரைக்கு மேலாகக் கற்களைவைத்தோ பயன்படுத்தப்பட்டன. ஒரு பாத்திரத்தில் மாவு வைக்கப்பட்டு அது அடுப்பிற்குள் வைக்கப்பட்டது.

மாஸ்ஸோட் என்று அழைக்கப்பட்ட பஸ்கா அப்பம் புளிப்பில்லா மாவைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. மோசேயின் மூலமாகத் தேவன், பஸ்கா அப்பத்தைப் பற்றிய அறிவுறுத்துதலைக் கொடுத்தார்:

> "புளிப்பில்லா அப்பத்தை ஏழுநாளளவும் புசிக்கக்கடவீர்கள்; முதலாம் நாளில்தானே புளித்தமாவை உங்கள் வீடுகளிலிருந்து நீக்கவேண்டும்; முதலாம் நாள் தொடங்கி ஏழாம் நாள்வரைக்கும் புளித்த அப்பம் புசிக்கிறவன் எவனோ அந்த ஆத்துமா இஸ்ரவேலரிலிருந்து அறுப்புண்டுபோவான்" (யாத்திராகமம் 12:15).

> "ஏழுநாளளவும் உங்கள் வீடுகளில் புளித்த மா காணப்படலாகாது" (யாத்திராகமம் 12:19அ).

> "அந்த ஏழுநாளும் புளிப்பில்லா அப்பம் புசிக்கவேண்டும்; புளிப்புள்ள அப்பம் உன்னிடத்திலே காணப்படவேண்டாம்; உன் எல்லைக்குள் எங்கும் புளித்தமாவும் உன்னிடத்தில் காணப்படவேண்டாம்" (யாத்திராகமம் 13:7).

> "ஏழுநாள் அளவும் உன் எல்லைகளிலெங்கும் புளிப்புள்ள அப்பம் உன்னிடத்தில் காணப்படலாகாது" (உபாகமம் 16:4அ).

இஸ்ரவேல் மக்கள் எகிப்தை விட்டுப் புறப்பட்டபோது, தேவன் கட்டளையிட்டபடியே செய்தனர். "பிசைந்தமா புளிக்குமுன் ஜனங்கள் அதைப் பாத்திரத்துடனே தங்கள் வஸ்திரங்களில் கட்டி, தங்கள் தோள்மேல் எடுத்துக்கொண்டு போனார்கள்" (யாத்திராகமம் 12:34). செங்கடலைக் கடந்து சுக்கோத் என்ற இடத்திற்குச் சென்றபின்பு அவர்கள் தங்களுக்கு, புளிப்பில்லாத அப்பங்களைச் சுட்டனர்:

> எகிப்திலிருந்து அவர்கள் கொண்டு வந்த பிசைந்தமாவைப் புளிப்பில்லா அப்பங்களாகச் சுட்டார்கள்; அவர்கள் எகிப்தில் தரிக்கக்கூடாமல் துரத்தி விடப்பட்டதினால், அது புளியாதிருந்தது; ... (யாத்திராகமம் 12:39).

போஜன பலியின் பகுதிப்பொருட்களைப் பற்றியும் தேவன் குறிப்பிட்டு இருந்தார்.

*ஒருவன் போஜன பலியாகிய காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்த வேண்டுமானால், அவன் காணிக்கை மெல்லிய மாவாயிருப்பதாக; அவன் அதின்மேல் எண்ணெய் வார்த்து, அதின்மேல் தூபவர்க்கம் போட்டு (லேவியராகமம் 2:1).*

*தானியம் அப்பமாகச் சுடப்பட வேண்டும் என்றால், "அது எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லா மெல்லிய மாவினால் செய்யப்பட்டதாக" இருக்க வேண்டும் (லேவியராகமம் 2:5; காண்க வசனம் 7; யாத்திராகமம் 29:40) மற்றும் அதில் தேன் ஊற்றப்படக் கூடாது (லேவியராகமம் 2:11).*

*ஆசாரியர்களைப் பரிசுத்தப்படுத்துவதற்கான அப்பம், கோதுமை மாவு எண்ணெய் கொண்டு புளிப்பான் இன்றிச் செய்யப்பட வேண்டியதாக இருந்தது (யாத்திராகமம் 29:1, 2, 23). பஸ்கா அப்பம் புளிப்பில்லாததாக இருக்க வேண்டும் என்பதைத் தவிர அதில் இருக்க வேண்டிய பகுதிப்பொருட்கள் பற்றி வேறு எதுவும் கூறப்படவில்லை.*

*இராப்போஜனத்தில் புளித்த மாவினால் செய்யப்பட்ட அப்பத்தைப் பயன்படுத்துதல் பற்றிய விஷயம் என்ன? நாம் - இயேசுவினால் பயன்படுத்தப்பட்ட திரவமான, "திராட்சரசம்" என்ற சொற்றொடரின் அர்த்தத்தைக் கொண்டுள்ள - திராட்சப்பழ ரசத்தைக் தவிர வேறு எவ்வகையான பழச்சாற்றையும் பயன்படுத்துவதில்லை என்னும்போது, அவர் பயன்படுத்தியது போன்ற புளிப்பில்லாத அப்பத்தைத் தவிர வேறு எந்த அப்பத்தையாவது ஏன் பயன்படுத்த வேண்டும்?*

*இயேசு புளிப்பில்லாத அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் பயன்படுத்தினார் என்று நாம் அறிகிறோம். அப்படியிருக்க, புளிப்பில்லாத அப்பத்தையும் திராட்சரசத்தையும் பயன்படுத்துதலே நமக்கு மிகச்சிறந்த வழியாக இருக்கும். அவர் பயன்படுத்திய அதே வகையிலான அப்பத்தையும் பானத்தையும் பயன்படுத்தி பாதுகாப்பான வழியில் ஏன் இருக்கக் கூடாது?*

## திராட்சரசம்

*இயேசு பயன்படுத்திய "திராட்சரசம்" எது? திராட்சரசம்தான் பயன்படுத்தப்பட வேண்டுமா? திராட்சரசத்தில் செய்யப்பட்ட ஒயின் என்ற மதுபானம் ஏற்புடையதாக இருக்கிறதா? அதைத் தண்ணீரில் நீர்க்கச் செய்தல் சரியானதாக உள்ளதா? திராட்சரச மணம் கொண்ட அல்லது கோலா பானம் சரியானதாக இருக்குமா? திராட்சப்பழம் மற்றும் ஆப்பிள் அல்லது வேறு ஏதாவது பழச்சாறு கலந்த கலவை சரியானதாக இருக்குமா?*

*பலஸ்தீன நாட்டில் திராட்சப்பழம்தான் அதிகமாக விளைந்தது மற்றும் திராட்சப்பழத்தில் இருந்துதான் சாறு எடுக்கப்பட்டது. இந்தக் காரணத்தினால்தான், "திராட்சப்பழரசம்" என்ற சொற்றொடர், புளிக்கச்செய்யப்பட்ட அல்லது புளிப்பாக்கப்படாத திராட்சப்பழரசத்தைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. இது போதைதரும் திராட்சை மதுவை மாத்திரம் அர்த்தப்படுத்திற்று என்று முடிவுசெய்தல் தவறானதாக இருக்கும்.[1] (Ampelos) என்ற வார்த்தை "கொடியை, திராட்சக்கொடியை" அர்த்தப்படுத்திற்று.[2] கிரேக்க மொழியில், கனிசுமந்த திராட்சக்கொடி,* grapevine *என்று சாதாரணமாகப் புரிந்துகொள்ளப்பட்டது (வெளிப்படுத்தின விசேஷம்*

14:18), "திராட்சரசம்" என்பது திராட்சப்பழத்தில் இருந்து பிழியப்பட்ட ரசமாக இருந்தது.

ஆட்டுக்குட்டியின் மாமிசமும் புளிப்பில்லாத அப்பமும் புசிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்ட நியாயப்பிரமாணம், உணவின்போது குடிக்க வேண்டிய பானம் என்று எதையும் குறிப்பிடவில்லை. இயேசுவின் காலத்தில் திராட்சரசம் கொண்ட நான்கு பாத்திரங்கள் பஸ்கா உணவில் பயன்படுத்தப்பட்டன என்று பொதுவாக யூகிக்கப்படுகிறது.

இயேசு, கர்த்தருடைய இராப்போஜனத்தை ஏற்படுத்தியபோது (மத்தேயு 26:28, 29) "திராட்சமதுவை" சுட்டிக்காண்பிக்க அர்த்தப்படுத்தி இருந்தார் என்றால், அவர் wine என்ற வார்த்தையைப் பயன்படுத்த முடிந்திருக்கும். இதுவே திராட்சமதுவுக்கான வழக்கமான வார்த்தையாக இருந்தது, இது எபேசியர் 5:18ல் பயன்படுத்தப்படுகிறது: "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபானவெறிகொள்ளாமல்." "திராட்சரசம்" என்பது, திராட்சப்பழச்சாறு புளிப்பாக்கப்பட்டிருந்ததா அல்லது புளிப்பில்லாது இருந்ததா என்று குறிப்பிடுவதில்லை. மதுபானங்களால் சோதிக்கப்படுகிறவர்கள் மற்றும் மதுபானம் பண்ணுதலுக்கு எதிரானவர்களின் மனச்சாட்சிகள் ஆகியவற்றின் நிமித்தமாக, புளிப்பில்லாத திராட்சப்பழரசத்தைப் பயன்படுத்துதலே மிகச்சிறப்பான தேர்வாக உள்ளது.

"திராட்சரசம்" என்பது திராட்சப்பழத்தில் இருந்து உற்பத்தியாக்கப்படும் ஒரு பொருளாக உள்ளது; ஆகவே வேறு எந்தப் பழச்சாறுமோ அல்லது வேறு எந்த பானவகையுமோ கர்த்தருடைய இராப்போஜனத்தில் பயன்படுத்தப்படக் கூடாது. இயேசு பாத்திரத்தை எடுத்தபோது அவர், திராட்சப்பழரசத்தை எடுக்க வேண்டும் என்ற அர்த்தத்தில், "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று கூறினார் (1 கொரிந்தியர் 11:25; காண்க மத்தேயு 26:28, 29). அவர் பாத்திரத்தில் திராட்சப்பழரசம் மாத்திரமே இருந்தது. அதைக் காட்டிலும் அதிகமாக அல்லது குறைவாகச் செய்பவர்கள் இயேசு செய்தது போன்ற "இதை" செய்வதில்லை.

கர்த்தருடைய இராப்போஜனத்தில் பின்வரும் நடைமுறைகள் தவிர்க்கப்பட வேண்டும்:

- இயேசு பயன்படுத்தியதைத் தவிர வேறுவகையான, அதாவது திராட்சப்பழரச சோடாபானம், வேறொரு வகையான பழச்சாறு அல்லது வேறு ஏதாவது பானம் ஆகியவற்றைப் பயன்படுத்துதல்.
- திராட்சப்பழரசத்துடன் வேறொரு பழச்சாற்றைக் கூட்டுதல்.
- ஆராதனையில் பங்கேற்பவர்களுக்கு அப்பத்தை மாத்திரம் புசிக்கக் கொடுத்து, ஆராதனையை நடத்துபவர்கள் பானத்தை அருந்துதல்.

## தொகுப்புரை

கர்த்தருடைய இராப்போஜனத்தில் புளிப்பில்லாத அப்பமும் திராட்சப்பழரசமும் உள்ளடங்க வேண்டியிருந்தது. இவைகள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கும் சபைக்குழுமத்தில் உள்ள விசுவாசம் நிறைந்து ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவராலும் பெறப்பட வேண்டும். இயேசு பயன்படுத்தியவற்றை மாத்திரம் பயன்படுத்துதலே பாதுகாப்பான வழியாக

இருக்கும். எந்த மாற்றமும் அல்லது பதிலிகளும் சிந்திக்கப்படக் கூடாது.

---

குறிப்புகள்

[1]David G. Burke, *"Fruit," The International Standard Bible Encyclopedia*, ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 2:365. [2]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 2000), 54.